தேசிய நூலக ஆவணவாக்கள் சேவைகள் சபை
ஆலோசனைச் சுற்று நிரூபம் 2004/மச/02(அ) (திருத்தம் 2017)

பாடசாலைகளில் ஒக்டோபர் - தேசிய வாசிப்பு மாதச் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

## 01. அறிமுகம்

2004 ஆம் ஆண்டிலிருந்து ஒக்டோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதமாக அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதன் படி 2017 ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் வாசிப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு பல விசேட செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு சகல பாடசாலை நூலகங்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல், நூலக வளங்கள் மற்றும் சேவைகளை நவீனப்படுத்தல் போன்ற செயற்திட்டங்களை குறிக்கோளாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

## 02. வாசிப்பு மாதம் தொடர்பான செயற்குழு

தேசிய வாசிப்பு மாதத்திற்காக செயற்திட்டங்களை ஒழுங்குப்படுத்தும் பொருட்டு வாசிப்பு மாதம் தொடர்பாக செயற்குழு ஒன்றை நியமித்தல் வேண்டும். நூலக செயலாற்க செயற்குழு (கல்வி அமைச்சின் பாடசாலை நூலக ஆலோசனைச் சட்டத்தின்படி பாடசாலை நூலக செயற்குழு ஒன்று காணப்பட வேண்டும்.) இக்குழுவின் மூலம் இச் செயற்பாட்டை நிறைவேற்ற முடியும். இக்குழு இல்லையென்றால், பிரதான செயற்குழு ஒன்றை நியமிப்பது பொருத்தமானதாகும். அதில் உள்ளடக்கப்படுவோர் விபரம் பின்வருமாறு:

- அதிபர் அல்லது பிரதி அதிபர் - குழு தலைவர்.
- ஆசிரிய நூலகர் அல்லது நூலகர் அல்லது நூலகப் பொறுப்பாளர் - குழுச் செயலாளர்.
- அதிபரினால் பரிந்துரைக்கப்படும் இரு ஆசிரியர்கள்.
- பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர் இருவர்.
- ஆறு மாணவர்களின் பிரதிநிதிகள்

## 03. நடைமுறைப்படுத்தக் கூடிய செயற்திட்டங்கள்

- வாசிப்பு முகாம், வாசிப்பு போட்டிகளை நடாத்துதல்.
- பனர் / மேற்கோள்கள் மற்றும் போஸ்டர்களை காட்சிப்படுத்தல். (வாசிப்பின் பெறுமதியை உள்ளடக்கும் விதத்தில்)
- சிறந்த வாசகர்களை மதிப்பீடும் முறையினை அறிமுகப்படுத்தல்.
- விசேட போட்டிகளை நடாத்துதல். (கட்டுரை, சித்திரம், பேச்சு, விவாதம், நடனம் மற்றும் பாட்டுப் போன்ற பல்வேறு பிரிவுகள்)
- நூலக கண்காட்சிகளை நடாத்துதல்.
- சுவர் செய்தித்தாள் மற்றும் சஞ்சிகைகளை வெளியிடுதல்,
- நூலகம் தொடர்பான துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு விநியோகித்தல்.
- சிரமதானம் / நூலகத்தை புதுப்பித்தமைத்தல் போன்ற செயற்பாடுகள்.
- கணினி மற்றும் இணைய வசதிகளைப் பெற்றுக் கொள்ளல்.
- கருத்தரங்கு மற்றும் விரிவுரை, இலக்கிய விமர்சனம், கலந்துரையாடல் ஆகியவற்றை நடாத்தல்.
- நிதி சேகரித்தல், நூற் கொள்வனவு மற்றும் அன்பளிப்புக்களைப் பெறுதல், அன்பளிப்பு வழங்குதல் போன்ற செயற்பாடுகள் மற்றும் புதிய உபகரணங்களை கொள்வனவு செய்தல்.
- நூலகம் மற்றும் அதன் வளங்கள் தொடர்பாக மாணவர்களுக்கு அறியத் தருதல்.
- இணையத்தின் மூலம் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான திட்டங்களை ஊக்குவித்தல்.
- புதிய தொழில் நுட்பத்தினூடாக தகவல் தேடுதல் (இன்டர்நெட்) தொடர்பான பயிற்சிப் பட்டறை, விரிவுரைகளை நடத்துதல்.
- கதை சொல்லும் நேரம், சினிமாப்படம் மற்றும் வீடியோ காட்சிகள் போன்ற பல்வேறு பொழுதுப் போக்குச் செயற்றிட்டங்களின் மூலம் வாசிப்புப்பழக்கத்தை ஊக்குவிப்புச் செய்தல்.
- சரியாக வாசிக்கும் முறைமையினை அறிமுகப்படுத்தல்.

- ஒக்டோபர் மாதத்தில் ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்தினை தெரிவு செய்து வகுப்பு ரீதியாக வாசிப்பு மாத செயற்றிட்டங்களினை நடைமுறைப்படுத்தல்.
- பாடசாலை நூலக தின விழாவினை நடாத்துதல். ( ஒக்டோபர் மாதத்தின் கடைசி வாரம் திங்கட் கிழமை)
- வகுப்பு ரீதியாக வாசகர் சமூகத்தினை உருவாக்கல் மற்றும் மேம்படுத்தல்.
- வாசிப்பு சம்மந்தமான விழிப்புனர்வினை ஏற்படுத்தும் பேரணிகளை நடாத்தல்.
- மாணவர்களிடையே மிகவும் பிரபல்யமான பத்து நூல்களினை தேர்ந்தெடுக்கச் செய்தல்.
- நூல்களை வாசிப்பதற்காக ஒரு வாரத்திற்கு பாடசாலை வளாகத்தில் வாசிப்பு கூடாரங்களினை அமைத்தல்.
- ஒரு எழுத்தாளர்/ஆசிரியரை அவரது படைப்புக்களை மதிப்பீடு செய்வதற்கு அழைத்தல்.
- ஒவ்வொரு பாடசாலை மாணவர்களுக்கும் வீட்டு நூலகத்தினை உருவாக்குவதற்கு ஊக்குவித்தல்.
- பாடசாலை நூலகத்திற்காக FaceBook கணக்கொன்றினை ஆரம்பித்தல்.
- நூலகத்தில் இனையத்தள சேவை அல்லது வலையமைப்பு சேவையினை ஆரம்பித்தல்.
- நடமாடும் நூலகச் சேவையை ஆரம்பித்தல்.
- நூலகம் தொடர்பான தகவல்கள் மற்றும் புகைப்படங்களை உள்ளடக்கிய இறுவெட்டுகளை உருவாக்கல்.
- வாசிப்பு பழக்கம், இலக்கியம், சித்திரம், தகவல் தொழில் நூட்பம், வாசிப்பின் முக்கியத்துவம் போன்ற தலைப்புக்களில் கட்டுரைகளினை எழுதி அச்சு ஊடகமாக வெளியிடல். ( ஆசிரியர் மற்றும் மாணவர்களின் படைப்புக்கள்)
- திறனை மதிப்பிட்டு வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கும் விழாக்களை ஒழுங்குப்படுத்தல்.

## 04. நிதி

இதன் பொருட்டு பாரியளவில் நிதியை உபயோகப்படுத்தத் தேவையில்லை. பாடசாலையின் பொது நிதியிலிருந்து ஒரு தொகையையும், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் நிதியிலிருந்து ஒரு தொகையையும் உபயோகித்தல் போதுமானதாகும். நிதி சேகரிக்கும் முறை பிரதேசத்தில் உள்ள செல்வந்தர்கள், அரச நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் வர்த்தகர்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்கு செயற்குழு நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

## 05. மதிப்பாய்வு

நூலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சகல செயற்திட்டங்கள் தொடர்பாகவும் ஒழுங்கு முறையில் தெளிவாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கையானது புகைப்படங்கள், இறுவெட்டுக்கள் மற்றும் வேறு ஆதாரங்களுடன் அதிபரின் பரிந்துரையுடன் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் ***பிரிவுத் தலைவர், விரிவாக்கல் சேவைகள் பிரிவு, தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, இல 14, சுதந்திர மாவத்தை, கொழும்பு 07*** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். இவ்வறிக்கை மற்றும் முகப்பு கடிதத்தின் ஒரு பிரதியினை வலயக் கல்வி பணிப்பாளர்க்கு விண்ணப்பித்து அவரின் பரிந்துரையுடன் இக்கடிதம் மாகாண கல்வி பணிப்பாளர்க்கு அனுப்பப்பட வேண்டும்.

தேசிய வாசிப்பு மாதத்தில் செயற்றிறன் மிக்க செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நூலகங்கள் தெரிவு செய்யப்பட்டு 2018 ம் ஆண்டு தேசிய வாசிப்பு மாத விருது வழங்கும் விழாவில் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

Dr. W. A. ABE...
Chairm...
National Library & Documentati...
14, Independence Avenue,
Colombo 07.

கலாநிதி டபிள்யு. ஏ. அபேசிங்க
தலைவர்

மேலதிக விபரங்களுக்கு:- தொலை பேசி இல – 011-2698847, தொலை நகல் - 011-2674387, இணையத்தளம் - www.natlib.lk